எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

டிசம்பர் 64

ஆறாம் ஆண்டு

அன்புள்ள வாசகர்களுக்கு 186
தலையங்கம்

உங்கள் காதுக்கு 187
சு. ச.

இரண்டு கவிதைகள் 188
தி. சோ. வேணுகோபாலன்

மாரி 188
தர்மூ சிவராமூ

விஷமம் 188
எஸ். வைத்தீஸ்வரன்

கவிதையும் மரபும் 189
தர்மூ சிவராமூ

நான் 192
வல்லிக் கண்ணன்

குருட்டு ஆந்தை 193
லக்ஷ்மீபதி

இன்று வரும் 196
சி. மணி

விழிப்பு 197
நா. வெங்கட்ராமன்

பொறிகள் 198
சுயபுத்தி

சிக்கல்—வேலன் 198
கொட்டைமுத்துப் புலவர்

மரக் குதிரை 199
எஸ். வைத்தீஸ்வரன்

சகுனம் 199
சு. சங்கரசுப்ரமண்யன்

50 பைசா

72

6-ம் ஆண்டு
ஏடு 72
டிசம்பர்
1964

எழுத்து

ஆசிரியர் :
சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஒரு ஆண்டு சந்தா ரூ. 5-00 வெளிநாடுகளுக்கு ரூ. 6-00 சந்தா, கட்டுரை சம்பந்தமான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (EZHUTTHU) 19-A, பிள்ளையார் கோயில் தெரு, திருவல்லிக்கேணி என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

தலையங்கம்

அன்புள்ள வாசகர்களே,

இந்த ஏட்டோடு எழுத்துக்கு ஆறு வயது முடிகிறது. சில நூறு சந்தாதாரர்களை மட்டுமே கொண்டு நடக்கும் ஒரு இலக்கிய விமர்சனப் பத்திரிகை மாதக்கணக்கெல்லாம் தாண்டி ஆண்டுக் கணக்காக வளர்ந்து வந்திருப்பது ஒரு பெரிய சாதனை! என்பதை ஏழாவது ஆண்டுக்குள் அது நுழையப்போகிற சமயத்தில் கொஞ்சம் பெருமையாகச் சொல்லிக் கொள்ளத் தோன்றுகிறது எனக்கு. அதிலும் இந்த சாதனை சாத்யமாகி இருப்பது சந்தாதாரர்களால் மட்டுமே என்று ஏற்படுகிற போது இந்த சாதனை தனிச் சிறப்பானதாக ஆகிவிடுகிறது. இந்த தனிச் சிறப்புக்கு வகை செய்த எழுத்து சந்தாதாரர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டே எழுதி இருந்தேன், வத்தக் குழம்பும்சாதமுமாக சாப்பிடும் போக்காக எழுத்து நடந்து வருகிறது என்று. இந்த ஆண்டும் அப்படித் தான். எழுத்து போஷாக்குப் பெறவேண்டும். குறைக்கப்பட்ட பக்கங்களை சேர்த்து அதிக விஷய அடக்கம் கொண்டதாக ஆக்கவேண்டும். அதுக்கான திட்டத்தை ஆண்டு ஆரம்பத்திலிருந்தே வகுத்தாக வேண்டும். எனவே சந்தாதாரர்களை கேட்டுக் கொள்கிறேன். இந்த எழுத்து கிடைத்ததுமே மறு தபாலில் உங்கள் சந்தாப்பணத்தை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஜனவரிக்கு காத்திராமல், நினைப்பூட்டு கடிதங்கள் எழுத இடம் ஏற்படாமல் உடனடியாக அனுப்பி வைத்தால் எனக்கு திட்டமிட வசதியாக இருக்கும்.

அதோடு பொங்கல் பரிசாக அன்பளிப்பு சந்தாக்கள் ஆளுக்கு ஒரு சந்தா குறைந்த பட்சம் அனுப்பி, எழுத்துவின் வாசகர் தொகையையும் பெருக்கி, சந்தாத் தொகையையும் பெருக்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். எழுத்து பார்க்க வேண்டும் என்று நீங்கள் விரும்பும் இலக்கிய ரசிகர்கள், உங்கள் நண்பர்கள் ஆளுக்கு ஒருவராவது நிச்சயம் இருப்பார்களே.

இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தையும் இந்த சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

எழுத்து பிரசுரம் ஆரம்பித்து நல்ல நூல்களை சிறப்பாக பதிப்பிட்டு வெளிக் கொணர்ந்திருப்பது வாசகர்களுக்கு தெரியும். இன்னும் பல சிறந்த புத்தகங்களை—இது வரை புத்தக உருவில் வராதவைகளை தொகுத்து வெளியிட தீர்மானித்திருக்கிறேன். எழுத்தாளனுக்கு தன் படைப்புக்களை புத்தக வடிவில் தான் பார்க்க விரும்பும் இயல்பான ஆசை உண்டு. அடுத்து, எழுதிய காலத்தில் ஊதியம் கிடைக்காவிட்டாலும், அப்படி கிடைத்திருந்தாலும், மிக சொற்பமாக இருந்தாலும், இன்று புத்தகம் வெளி வந்து அவனோ அவன் குடும்பமோ அதனால் கொஞ்சம் பயன் அடையும் என்ற நினைப்பும் நிறைவேறச் செய்ய வேண்டும், இந்த இரண்டையும் மனதில் கொண்டு, காலத்தால் கைப் பிரதிகள் கிடைக்காமல் போய் படைப்பும் படைப்பாளியும் தெரியாமலே போய் விடுகிற நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது என்ற உறுதியும் கொண்டு இந்த வெளியீடுகளை வெளிக் கொணர உத்தேசித்திருக்கிறேன்.

புத்தகங்களை போடுவது பெரிதல்ல. வினியோகித்து விற்பனை செய்வதுதான் பெரிய காரியம். நானே இந்த நூல்களை சுமந்து கொண்டு ஜில்லா ஜில்லாவாக பள்ளிக் கூடங்களையும், கலாசாலைகளையும், நூல் நிலையங்களையும் புத்தகப்பிரியர்களையும் தேடி சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறேன். ஒரு ஆயிரம் புத்தகங்களாவது குறைந்த பட்ச கால அளவுக்குள் விற்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் துணிந்து மேலே செல்ல தெம்பு கொடுக்கும். எனவே எழுத்து வாசகர்களை கேட்டுக் கொள்கிறேன், எழுத்து பிரசுரம் நூல்களை செட்டாக அப்படியே வாங்கும்படி. அதோடு எழுத்து பிரசுரங்களை வாங்குவதாக எனக்கு முன் கூட்டி தகவல் கொடுத்தால் நான் இன்னும் ஊக்கமாக ஈடுபடுவேன்.

எழுத்து, எழுத்து பிரசுரம் இரண்டும் ஒரு தனி மனித முயற்சி. என் சக்திக்கு அப்பாற்பட்ட முயற்சி என்று கூடச் சொல்லுவேன். இரண்டுக்கும் உங்கள் ஆதரவு தேவை. அது தான் எனக்கு பலம். எனவே,

1. உங்கள் சந்தாக்களை மறு தபாலில் அனுப்பி வைக்கும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறேன், அன்பளிப்பு சந்தாக்களுடன்.

2. எழுத்து பிரசுரம் புத்தகங்களை வாங்கிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டு சம்பந்தமாக உங்கள் ஆதரவான செயலை எதிர்பார்க்கிறேன்.

தங்கள்,

சி. சு. செல்லப்பா

உங்கள் காதுக்கு

சு. ச.

சமீபத்தில் சென்னைக்கு வந்து விட்டுப் போன ஷெர்லி மெக்லேன் என்ற அமெரிக்க நடிகைக்கு நம் நடிகநடிகையர் விஷயத்தில் ஒரே ஒரு ஆச்சரியம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவர்களால் எப்படி ஒரே சமயத்தில் பல படங்களில் நடிக்க முடிகிறது என்பது தான் அது. இதிலே ஆச்சரியம் என்ன இருக்கிறது? நடிப்பவர்கள், தொழில் நுணுக்கர்கள் சம்பந்தப்பட்ட ஒரே குழு, ஒரே மாதிரிக் கதைக்கு ஒரே மாதிரி காதல் பண்ணுவது, ஒரே மாதிரிப் பாட்டுக்கு ஒரே மாதிரி ஆடி அசைவது என்ற ரீதியில் இயந்திர உற்பத்தியாகச் சாதனை காட்டுகிற காலம் இது. வேணுமானால் காதல் பண்ணுகிற இடம் மாறலாம் —காருக்குள்ளே, வண்டிக்கடியில், படகுக்குப் பின்னால், பாலத்துக்கு மேலே. ஒப்பனையை மட்டும் மாற்றிக் கொண்டு ஒப்பேற்றி விடுவதில் என்ன சிரமம்?

சங்கீத நாடக அகாடமியின் இந்த ஆண்டுப் பரிசை வாங்கிக் கொள்ள சிதார் வாத்ய விற்பன்னர் விலாயத்கான் மறுத்ததோடு நில்லாமல், தான் அவ்வாறு செய்ததற்குக் காரணமும் சொல்லியிருக்கிறார். தேர்ந்தெடுக்கும் முறை ஏதேச்சையாகவும், கொள்கை அடிப்படை இல்லாமலும், பாகுபாடு அற்ற வகையிலும் அமைந்திருப்பதைக் கண்டித்து, மக்களையும் கலையையும் உண்மையிலேயே மதிப்பதானால் அகாடமியின் தேர்வு முறை மாறித்தான் ஆகவேண்டுமென்று அழுத்தமாகச் சொல்லி விட்டார். முறை பற்றிக் கேட்டால் அகாடமியிடம் இருந்து தெளிவான பதிலுக்கும் வழி இல்லை என்று தெரிகிறது. உஸ்தாதின் துணிவு பாராட்டுக்குரியது. அவர் நம்புகிற மாதிரி இதனால் ஏதேனும் மாறுதல் விளைந்தால் நல்லது தான்.

நோபல் பரிசைக் கூட மேல் நாட்டு மேதைகள் மறுத்து ஒதுக்கி இருக்கிறார்கள். 'என்னை விட இன்னாருக்குத் தான் அதிகத்தகுதி,' என்று பகிரங்கமாக அறிவித்தவர்களும் உண்டு. நம்முடைய சாகித்திய அகாடமி அளிக்கும் இலக்கியப் பரிசையும் தட்டிக் கழிக்கும் தைரியம் எந்த இலக்கியவாதிக்காவது பிறந்தால் தான் விமோசனம் உண்டு. தேர்வு முறையில் தெளிவும், புறச்சிந்தனைகள் அற்ற அளவையும் இல்லாத வரையில் இம் மாதிரி முத்திரைகளால் யாருக்கு லாபம்?

ஒன்று விட்டொரு வெள்ளிக்கிழமை வட்டமிடும் இலக்கிய ஏட்டின் கருத்துக்களே அலாதி. ஆனால் அதற்கும் காரணம் புரிகிறது. அடிப்படை நம்பிக்கை இல்லாமல் எந்தத் துறையைத் தொட்டாலும் விளைவுகள் விசித்திரமாகத்தான் இருக்கும். விபரீதமாகக் கூட. பின் என்ன, விமர்சனத்தில் நம்பிக்கை இல்லாத ஒருவர் ஆசிரியராகி விமர்சனத்துக்குப் பத்திரிகை நடத்துவதென்றால்?

அதோடு நில்லாமல், விமர்சனத்துக்கு ஆதாரங்கள் கற்பித்து, பஞ்சசீலம் உருவாக்குவது இன்னும் வேடிக்கையாக இருக்கிறது. ஒரே புத்தகத்தை பதினேழு தடவை படிக்கும் போது ஒரே நபருக்கு பதினேழாயிரம் மாற்று அபிப்பிராயங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத நியதி என்றால், அப்புறம் விமர்சனத் துறைக்கென்று பொதுவான அடிப்படை எப்படி ஐயா பிறக்க முடியும்? அவரவர் பார்வைக்கு அவ்வப்போது தோன்றுவதே முடிவு, அடித்துச் சொல்லி விட்டால் அப்பீலே கிடையாது என்று ஆகிவிட்டால் பஞ்சசீலம் பயன் தருமா, பறந்து விடுமா என்று புரியவில்லை.

இதே போல கவிதைக்குக் காலம் இல்லை என்று கல்லறை கீதம் பாடிவிட்டு, மறுகணமே பத்தி பத்தியாக, பக்கம் பக்கமாக கவிதைகளை வழங்குவது எதனால்? அந்தக் கவிதைகளைப் படித்து விட்டு, 'ஆமாம், காலம் இல்லை' என்று உணரவா? அதுவும் போகட்டும். இலக்கியத்திலே எந்தச் சரக்கு பொருள் ஆனால் என்ன? மதுவைப் பாடினால் போதை என்பதா? படிப்பவனுக்குப் போதை உணர்ச்சி ஊட்டுமானால் சிறந்த படைப்பாயிற்றே. ஏழையைப் பாடினால் எள்ளி நகையாடுவதா? வண்ணானைப் பாடினால் அழுக்கு நெடி அடிக்குமா? குயவனைப் பாடினால் குமட்டுவானேன்? எப்படி பாடியிருக்கிறது என்பது தானே முக்கியம்? சாக்கடையைச் சந்திக்கு இழுத்ததால் அன்று புதுமைப்பித்தனைக் கண்டு முகம் சுளித்தவர்களும் மிரண்டு சீறியவர்களும் இன்று என்ன ஆனார்கள்? நாளைக்கும் இந்தச் சரித்திரம் தான், சந்தேகமே இல்லை.

இன்னொரு அபிப்பிராயம் வேறு. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மேல் எந்த நல்ல பத்திரிகையும் நீடிக்க முடியாதாம். ஆயுள் நீடித்தாலும் அதன் தரம் நீடிக்காதாம். மணிக்கொடி முதல் சந்திரோதயம் வரை 'சோக வரலாறு சுட்டும் உண்மை தான் இது. 'சூறாவளி' யால் சூடுண்ட அனுபவம் வேறு உண்டு. என்றாலும் அன்றைக்கு இன்று ரசனை வீச்சு விரியவில்லை? எப்படியோ, இப்படிச் சொல்லும் பத்திரிகை, புறப்படும் போதே, இத்தனை நாளைக்குத் தான் என்று திட்டம் போட்டிருக்கக் கூடும். அதைப் பற்றிக் கவலைப் பட வேண்டியவர்கள் அந்தப் பத்திரிகைக்கு ஆயுள் சந்தா கட்டியவர்கள் அன்றோ?

குருவிக் கூடும் கூட்டுறவு வீடும்

மலேயில் பிறந்து
முடியின் இழியும்
அழகில் திளேக்க
அழைப்பு விடுத்தேன்;

குழாய்வழி குதித்து
பொறி சுழற்ற வரும்
விழாவினேக் காண
' வா ' வென அழைத்தான் '

வீட்டில் விளக்கு ;
மூலிகை மருந்து ?
......
சாலே இருமருங்கும்
தன்னிச்சையாய் வளர்ந்து
சூழும் தருக்கோலம்
பார்க்கிறேன்;

தேக்கு மரவரிசை
மின்சாரக் கம்பங்கள்
நிற்கும் நேர் கோட்டை
நோக்கினுன் !

பறவைக்குச் சத்திரம்;
குடும்பத்துக் காகுமா ?
...
தோட்ட மலர்க்
கூட்டம்
காட்டினேன்;

கொடுத்த மலர்க்
கதம்பம்
கேட்கிருன் !
சூட்ட வென்ருன்
சுமை என்றேன் !

முடி நாற்றம் மறைக்கப்
போர்வை மலர் ?!

தி. சோ. வேணுகோபாலன்

இளமைக் கதை

காலம்
நீண்டு நீள்கின்ற நீளும் நெடுங்கோடு;
கனவாய்
நிகழ்ச்சியாய்
கதையாய் மாறும்
" நான் "
ஒரு புள்ளி :
உண்மை !
....
கண் குத்தும்
கொம்பசைவு,
குழைகின்ற
கொடியழகு
வம்புக்கிழுக்கின்ற
வேளேயில்......
கூனலும் கோலும்
காட்டி
சாத்திரம்
குழிதப்பி வழிமாற
சிரஞ்சீவிக் கதை படிக்கும் !
புள்ளிக்குப் பக்கம்
புள்ளி வைத்தால்
சிரஞ்சீவிதானே !

தி. சோ. வேணுகோபாலன்

மாரி

குளமாய்ப் பூக்கும்
மழை விதைகள்.
முகிலின் குரல் எச்சில்.
வானச் சுவரொட்டி
பல்லிக் குமுறல்.
பரிதி கிழிந்து
தொங்கும் மின்னல்.
தண்ணீர் பின்னி
நீர் நூல் திரளின்
வேர் கிளேத்த
மலே முளேகள்
காற்றின் சவுக்குத் தொடர்.
உருகிய கண்ணுடிக்
கடல் அலேப் பாறை.
கணங்கள் கழன்றது.
பருவத்தின் ஓர்
ஒற்றை பிரிந்தது.
வெளியில் மாரிச்
சுவர் எழுந்தது.
தூரிகை இயற்கை
புரண்டது.

தர்மு சிவராமு

விஷமம்

இமையைமூடி விழித்திருந்தால்
இருட்டும் தெரியலாம்-இல்லே
இருளும் ஒளியும் படைக்கும் ஈசன்
அருளும் புரியலாம்.

மூக்கைப் பிடித்து விழித்திருந்தால்
மூச்சும் முட்டலாம்-இல்லே
காற்றில் ஏறிக் ககனம் கடந்து
மோட்சமும் கிட்டலாம்.

நினேவில் ஒன்றே நினேத்திருந்தால்
அறிவும் மழுங்கலாம்-இல்லே
அறிவில் ஒளிந்து அகிலம் நிறையும்
ஆனந்தம் கிடைக்கலாம்.

எஸ். வைத்தீஸ்வரன்

கவிதையும் மரபும்

தர்மு சிவராமு

இப்போது நம் முன்னே நான்கு உருவங்களைப் பார்க்கிறோம். வசனம், யாப்புக் கவிதை, ஃப்ரீ வேர்ஸ் என்ற புதுக் கவிதை, பாரதி புத்தகத்தில் இடப்பட்ட பேரையொட்டி நிற்கும் வசன கவிதை.

இந்த நான்கையும் பாகுபடுத்திப் பேசிக் கொள்வதால் சில சிக்கல்கள் ஏற்படாமல் தவிர்க்கலாம். அவற்றுள் ஒன்று, லா. ச. ரா. தன் சில கதைகளில் முறித்து முறித்து எழுதுவது வசனமா என்ற சந்தேகத்தால் உண்டாகிற சிக்கல். அது சந்தேகமில்லாமல் வசனமே! உன் முகத்தில் வெண்மை ஜ்வலிக்கிறது!.. இத்யாதி எல்லாம் பாரதி ரக வசன கவிதையை ஞாபகமூட்டினாலும், அது வசனம். ஏனென்றால், உள்ளடக்கரீதியாக அதன் கௌரவம் அப்படி, ஆனால் பாரதி எழுதினதில் உள்ளடக்கம் வசனத்தில் எழுதப்படத்தக்கது அல்ல. அதாவது 'இடி இனிது' என்றால் 'ஏன்' என்ற கேள்வியையும் அருகு எழுப்பி விஞ்ஞான விளக்கம் கொடுக்கிறதுதான் வசனத்தில் உள்ளடக்கமாகக் கொள்ளக்கூடியது. மரணம் கூட 'இனிது' என்று கொஞ்சம் கூட தர்க்கப்போக்கு இல்லாமல் பேசுவது, வசன உலகத்தில் இதுவரை செய்யப்படாதது ஆகும். அதோடு, 'உணர்ச்சி அதிகரித்தால் தரையில் நடக்கும் வசனம் சிறகு பெற்று கவிதையாகிவிடும்' என்றதைச் சேர்க்கக் கூடாது. உணர்ச்சி அதிகரித்த வசனம்தானே புதுமைப்பித்தனின் .'தெருவிளக்கு', 'பிரம்ம ராக்ஷஸ்', எடுப்பு, லா. ச. ரா. கதைகள்! ஆகவே உள்ளடக்கம் உருவத்தைப்பாதிக்கிற பாணியை வைத்து ஒரு நுட்பமான வித்தியாசத்தை கவனித்து, பாரதி ரக வசன கவிதையையும் ஃப்ரீவேர்ஸையும் பிரிவு கட்டிக் கொள்ளவேண்டும்.

ஒரு கவிஞர் என்னிடம் 'மரபு மீறி மரபு அமைப்பதென்றால், ஏற்கனவே உள்ள உருவத்திலும் சிறந்த, இறுகிய, 'சப்தநயம் அதிகரித்த, உருவமாக அல்லவா யாப்பை மீறின கவிதைகள் இருக்கவேண்டும் என்று சொல்லி, 'எழுத்து' ஏட்டில் '' த. சி. ராமலிங்கம் என்ற பேரில் நான் எழுதியிருந்த 'நான்' கவிதையைக் காட்டி, 'இது புது உருவமாக இருக்கையிலேயே கவிதை உருவமாக, சப்த நயம் சேர்ந்த உருவாக இருக்கு' என்றார். அந்த கவிதை ஒன்றும் புது உருவமாக இருக்கமுடியாது, யாப்பின் கோடுகள் எதுக்குள்ளேனும் ஒன்றுள் அடைபடும் என்று நம்புகிறேன். ஆனால் அவர் சொல்வதைக் கவனிப்போம்.

'புது உருவம் சிறந்ததிலும் சிறந்ததாக இருந்தாக வேண்டும்' என்கிறார் அவர். தொடர்ந்து, 'இப்போது வசனகவிதை (புதுக் கவிதை என்ற அர்த்தத்தைச் சொல்கிறார்) என்று எழுதப்படுபவை மெருகு ஏறு முன்பு கவிதை இருந்த Primitive நிலைக்கு கவிதையைத் தாழ்த்தும் வேலையாக உள்ளது' என்றார். எனினும், இலக்கியத்தில் சோதனைகள் அவசியம். அதோடு இந்த வசன (புதுக்)கவிதைகளை இலக்கிய நோட்டத்தோடு பார்த்து காலத்தின் கையில் அதன் ஜீவிதத்தை ஒப்படைப்பது தான் தாறுமாறாக எதிர்ப்பதை விட பெருந்தன்மையானது' என்று ஒரு கலைப்பாங்கான நோக்கும் தெரிவித்தார்.

சரி, இதே கவிஞர் வேறு சந்தர்ப்பத்தில் என்னிடம் பேசிய சில விஷயங்களையும் பார்ப்போம்.

'ஓசை ரொம்ப முக்யம். இதை உணர்ச்சியோடு சேர்த்துக் கொண்டுவர, சிரமப்பட்டு, வார்த்தை வேட்டையாடி எழுதினால் கவிதை வரும். கொஞ்சம் சிரமப்பட்டாகணும். எதுகைச் சொற்களை அடுக்குவது ஆரம்பத்தில் சிரமமானாலும் பயிற்சியால் அப்புறம் கடகடவென்று அவை வரும்.'

கவிதை அழகுக்காக, உருவ அழகுக்காக, ரிதுமையும் எதுகை மோனையையும் ஆதரிக்கும் இவரே, யாப்பிலக்கணத்தில் எதுகைமோனை செய்யுளுக்கு முக்யம் என்று சொல்லப்படவில்லை என்பதைத்தான் அறிவதாகச் சொல்கிறார். உண்மையில் எதுகைமோனையை யாப்பு வற்புறுத்தவில்லை. நாலடியாரில் எத்தனையோ வெண்பாக்கள் எதுகை கெட்டு உள்ளதைக் காணலாம். யாப்பு சொல்வதெல்லாம், இத்தனை அடிகளில், ஒரு அடிக்கு இத்தனை நீளமான இத்தனை சொல் வீதம் சொல்லுக்குச் சொல் இன்ன மாதிரி தளைந்து வந்தால், அது இன்ன ரகமான செய்யுள்' என்பதுதான்

'இத்தனை வார்த்தைகளில் கதை எழுது' என்று சொல்லுகிற போட்டிக்கதை நீதிபதிகளின் மீது சீறிவிழுகிற இலக்கியக்காரனுக்கு, இந்த 'இத்தனை இத்தனை கோர்ப்புச் சங்கிலிகள் பிடிக்கவில்லை. அதோடு, கருத்தின் ஓட்டமும், உணர்ச்சிக்கு ஏற்ப தான் அள்ளி வருகிற சொற்களும், யாப்பு வார்ப்புக் கலத்துள் தங்காமல் வழிவதைக் கவனிக்கிறான். தான் இன்ன சொற்களில் ஏற்றிக் கொண்டு வரும் உவமை, அதே சொற்களில் தங்காமல், யாப்பின் ஏகாதிபத்தியம் ஆளுவதைப் பார்க்கிறான். எனவே, அதே உவமைக்கு வேறு சொல், கட்டுக்குள் போட்டு நிரப்பத்தக்க சொல் வேட்டையில் இறங்குகிறான். இதற்குள் மறுபுறத்தில் உணர்ச்சி ஆவியாகி விடுகிறது. கவிதையும் நிதர்சன உணர்ச்சியை இழந்து, 'கவிதை முடி

யணுமே' என்றதால் போலி உணர்ச்சி பெற்று உள்ளடக்க ரீதியில் குறைப்பிரசவமாகிறது.

இது என் அனுபவம்!

யாரேனும் 'இம்மென்னும் முன்னே எண்ணூறும் எழுநூறும்' யாப்பினுள் பாடித் தள்ளுகிறவர்கள் இருக்கலாம். அவர்களது மேதாவிலாசத்தைக் கும்பிட்டுக் கொண்டு சொல்கிறேன்;

நான் என் உணர்ச்சிகளுக்கும் அவை தாங்கி வருகிற உவமை, விஷயங்கள் கருத்துக்களுக்கும் மட்டும் பிரதான்ய முக்யத்வம் கொடுக்க விரும்புகிறேன். எனக்கு கவிதையின் உருவம் இரண்டாம் படி தான். இப்படி கவிதை உருவத்தை இரண்டாம்படி யாக்குவதால் தான் புதுக்கவிதையாக என்போன்றவன்கள் சொல்பவை ஆகின்றன.

ஆக, நான் சிறந்ததிலும் சிறந்ததாக மதிப்பது உள்ளடக்க ரீதியில் புதுமையையும் ஒரு அப்பட்டமான வெளியீட்டையும் தான். அதோடு சொற்களை எதுகைமோனை பார்த்துப் பின்னுவதால் வாசகன்—இலக்கிய ஸ்மரணையற்று "எருமைமாடு பருத்திக் கொட்டை தின்கிற மாதிரி" புஸ்தகம் படிக்கிற வாசகன்—ஏமாறுவான் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

சப்தநயம் அதிகரித்த எதுவும் யாப்பை மீற முடியாது. மரபு மீறி மரபாக அமைவதாக அது ஆகாது. ஃபிரீவேர்ஸை Primitive கவிதை உரு என்று சொல்வது விவாதத்துக்கு உரியது. பிச்சமூர்த்தி, மனிதன் வாயால் பாடுமுன்பே இசைக் கருவிகளைக் கண்டு பிடித்திருக்கலாம் என்கிறார். ஆகவே, இசை ஒழுங்கு பட்ட பிறகு வாயால் பாடிட அர்த்தமற்ற சப்தத்தில் கத்தியிருக்கலாம். இந்தக் கத்தலோடு சொற்கள் கலந்ததால் பாட்டு என்ற வர்க்கம் தோன்றியிருக்கலாம். ஆகவே சப்தநயத்தை வெகுவாக ஒட்டியே முதல் பாட்டு சப்தத்தை நிரப்புவதற்கு பொருள் தேவையாக இருந்ததால் வார்த்தைகள் மூலம் உருவாகியிருக்கலாம். இப்படிப் பார்க்கப்போனால், முதலில் இசை, அப்புறம் பாட்டு, பிறகே உணர்ச்சிக்கும் சொல்லுக்கும் உள்ள தொடர்பு தெரிந்த பின் கவிதை என்று சொல்லத் தோன்றும்: மொத்தத்தில் கவிதை இசைக்காக என்ற நோக்கோடு சரித்திரம் வருவதைத்தான் காண்கிறோம். இன்று தான், இசை கவிதைக்காக, அதுவும், மென்மையான இசைத்தன்மை போதும் என்ற நெகிழ்வு தோன்றியிருக்கு.

குழந்தைகள் பாடும்போது சொல் தெரியாமல் பாடுகிறமாதிரியே ஆதி மனிதன் பாடியிருப்பான். முதலில் பாட்டு மட்டும், பிறகு சொல் கலந்த பாடல். அடுத்ததாக சொல்லின் மதிப்பை உணர்ந்த மனிதன் உணர்ச்சியோடு கலந்து சொன்னான். அதே சமயத்தில் சப்தபேதம் உணர்ச்சி பேதத்துக்கு ஏற்ப மாறுபடுவதைக் கவனித்து சப்தத்தை — உணர்ச்சியை — அடிப்படையாக்கின தன் பாட்டுக்களோடு, உணர்ச்சியில்—அந்த சப்தம் குறிக்கும் அதே உணர்ச்சியில் குழைத்த சொற்களைக் கலந்தான். இதுவே இசைக் கவிதை. இப்போது, சப்தத்தின் முக்கியத்வம் கழன்று, சப்தத்தினால் வெளிப்படுத்தப்படும் உணர்ச்சியும் சப்தம் கழற்றப்பட்டதால் களைந்து சொல்லினால் வெளியாகும் உணர்ச்சியோடு கவிதை மட்டும்—வெறும் கவிதை—புதுக் கவிதை தோன்றியிருக்கு. இது Primitive என்று ஆகுமா, Modern என்று ஆகுமா?

சொல் விளையாட்டு பயிற்சியால் படியும். கவிதை பயிற்சியால் படிவதல்லவே!

சொற்களின் விளையாட்டினால் போலித்தனமான உணர்ச்சி வெளியீட்டை உருவத்தின் முழுமை மூலம் சொல்லி வாசகனை ஏமாற்றி விடலாம். ஆனால் "போலிக் கவிதை" என்று சொல்லப்படுகிற புது—வசன—கவிதைகளில் சொல் விளையாட்டே இல்லை. ஆகவே, உள்ளீடுகோறை பட 'பாட்டுக் கட்டு' கிறவர்கள் இந்தத் துறையில் இறங்கினால் அவர்களது அந்தரங்கம் புலப்படும். நிஜமான கவிஞனுக்கு மட்டும் தான் இந்தப் புதுத்துறைகள். உருவத்தை வைத்து ஏமாற்றி போலிக்கவிதை புனைகிறவர்கள் இங்கே இறங்கினால் அர்த்த ஆழமோ உணர்ச்சி வீறோ அற்று அவர்கள் எழுதுவதால் உள்ளடக்க ரீதியில் அவர்கள் சொல்பவை புது—வசன— கவிதைகளிலேயே வெறும் வசன வெளியீட்டு உள்ளடக்கங்களாகவே இருக்கும்.

ரகுநாதன், 'புதுமைப்பித்தன் கவிதைகள்' முகவுரையில், "இப்படிப்பட்ட வேகம்...கவிதை இலக்கியத்தில் தான் அதிகப்படியாக...பிரதிபலிக்கிறது. மனம்பாடம் ஆகும் வண்ணம்,, (பக் 15) என்கிறார். "இலக்கணக் கட்டுக்கோப்புக்குள் வரும் வார்த்தைகள் எந்த அளவுக்கு அந்தக் கட்டுக்கோப்புக் குள்ளிருந்துகொண்டு அதிகப்படியான சக்தியை வெளியிடுகின்றனவோ அந்த அளவுக்கு வேகம் பெறுகின்றன...கவிதை ஆகின்றன." (பக் 16.)

ரகுநாதனின் முதலாவது கருத்து ஒப்புக் கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில், மரபுக்கிணங்கிய கவிதையின் 'வேகம்' வசனத்தில் வந்தால் கூட மனசில் தங்கிவிடும். 'பிரதிபலித்தல்' 'மனப்பாடம் ஆதல்' எல்லாம், ரஸனையின் ஆழத்தையும், ஞாபகசக்தியையும், திருப்பிப் படிக்கத் தூண்டும் ஆவலையும் பொறுத்தது, கவிதைக்கு மட்டும் இத்தன்மை உரியதல்ல. 'பிரம்ம ராக்ஷஸ்' எடுப்பின் பல பகுதிகள், என்னையறியாமல், நான் ஆசைப்படாமலே மனசில் ஞாபகமாகி விட்டன. பிரதிபலிப்பது 'சப்தம்தான்'. கவிதையின் சப்தப் பகைப்புலத்தை வைத்து கவிதையின் வார்த்தைகளை பாடமாக்குவது எளிது என்று கொண்டு, இப்படிப்பட்ட தன்மைக்காகவும் தான் கவிதையின் உயர்வு பெரியது என்று கொண்டால், சொல்விளையாட்டுப் பாட்டுக்களும் இதே கௌரவ

வம் அடையநேரும். ஏன் சினிமாப்பாட்டு 'பிரதிபலிப்ப' தில்லையா? இதில் சப்தம் ஒலியசை வாக 'பிரதிபலிக்க' சப்தத்தின் பின்னிருந்து மறைவாக அர்த்தமும் உணர்ச்சியும் உள்ள சொற்கள் பிறகே ஞாபகத்தில் ஏற்றப்படுகின்றன. புஸ்தகம் இல்லாத பழங்காலத்தில் 'கேள்வி' மூலம் படிக்கவேண்டியிருந்ததால் தான் இசை வடிவாக போதனை நடந்தது. வைத்தியம் போன்ற Practical கலைநூல்களும் பாட்டு வடிவில் இருந்தது—மனசில் சுலபமாக வாங்கிக் கொள்ளக் கூடியது சப்தம் என்பதாலும் ஏட்டுச் சுவடியைத் தூக்கித் திரியும் தொல்லை முதலியவற்றை ஞாபக சக்தியால் தவிர்ப்பதற்காகவும் தான். ஸ்தூலமாகச் சொன்னால், ஏட்டில் எழுதவேண்டிய சொற்களை சப்தம் என்கிற கண்ணுக்குப் புலப்படாத காகிதத்தில் எழுதினர்கள் எனலாம். ஆகவே பிரதிபலிப்பு' இருக்கிறது எல்லாம் சிகர இலக்கியங்களாக முடியாது. உணர்ச்சி வெளியீடு கருத்து வெளியீடு என்பவற்றை வைத்தே எடை போடவேணும். 'என்பவற்றை வைத்தே' என்பதை அழுத்த விரும்புகிறேன்.

'சப்தநயம் பிரமாதமாக இருக்கிறது—கருத்தோ உணர்ச்சியோ இலக்கிய நயமோ இல்லாவிட்டாலும்' என்று ஒரு பாட்டுக்கு 'முடிசூட்டி' விமர்சனம் எழுதுவாரா ரகுநாதன்?

இனி இரண்டாவது கருத்து: யாப்பின் அணைக்கு மானுமாரிக் குளம் ஒன்றன் கரையையும் பாபனுசம் அணைக்கட்டையும் உவமிக்கிறுர். கவிதை நயத்தின் திமிறல் உள்ள உள்ளீடு பாபனுசம் அணைக்கட்டை விட்டு மீறி எழும் நீர் மாதிரி வேகத்தோடு வர, மானுமாரிக குளத்தின் நீர் போல் நலமற்ற கவி கரையையே தொட முடியாமல் ஆழத்தில் தேங்கி நிற்கிறதாம். தொடர்ந்து தான் அந்த இரண்டாவது கருத்தான ''இலக்கணக்கட்டு...'' வருகிறது. இலக்கணக் கட்டுக் கோப்பை அணைக்கட்டுக்கு உவமித்ததில் ஒரு தவறு. எப்படியென்முல், பீறி வருகிற தண்ணீர் அணையை உடைக்கவும் கூடும். உடைத்து விட்டால் அதன் பீறுதலில் வேகம் மலினப்படும் தான். ஆனுல் இதை, 'யாப்பை உடைப்பதால் கவிதையின் வேகம் மலினப்படும்'' என்று கொள்ள முடியாதே. ஏற்கனவே சொன்னபடி ஒரு சுயேச்சையான போக்கு கிடைப்பதால் வேகம் ஏறுமே தவிர குறைவதில்லை. அனுபவம் அப்படி. அனுபவம், கருத்துச் சுழற்சி சம்பந்தப்பட்ட உவமை, தர்க்கம், எல்லாத்தையும் விட முக்கியமானது.

இலக்கணக் கட்டுக்கோப்புக்குள் வார்த்தை இருப்பது' ஒன்று. அடுத்தது அந்த வார்த்தைகள் தாமாக 'அதிகப்படியான சக்தியை வெளியிடுதல்'. இந்த இரண்டும் ஒன்றுக்குள்ஒன்ருக, இருப்பதால் மட்டும் தான் கவிதை சாத்யமா?

ரகுநாதன் ஏற்கனவே 13 ம் பக்கத்தில் சொல்கிறுர்: ''ஒரு வார்த்தை வேறு பல வார்த்தைகளின் துணையோடும் கூட்டுறவோடும் வரும் போது, பிற வார்த்தைகள் சுற்றுப்பரிவாரம் போல் சூழ்ந்து வர....அதன் வலுவும் வேகமும் சராசரி நிலையை விட அதிகமாகி விடுகிறது.''

ஆகவே, அவரே சொல்கிற, 'வேறு பல வார்த்தைகளின் துணையும் கூட்டுறவும் ஒரு வார்த்தைக்கு வலு ஏற்றுகிறது' என்கிற அதே அடிப்படையில் சப்தம் என்ற சீலையை உரிந்துவிட்ட நிர்வாண நிலையில் கவிதையை ஏன் வெளிப்படுத்தக் கூடாது? ஏன் இந்த 'சராசரி நிலையை விட அதிகமாகிற' வேகத்தையே கவிதையின் வேகம் என்று ஒப்புக்கொள்ளக் கூடாது'?

இவ்வளவு தூரம் போகவேண்டாம். 'எந்த அளவுக்கு அதிகப்படியான சக்தியை வெளியிடுகின்றனவோ, அந்த அளவுக்கு? என்றது கவிதையில் சப்த இலக்கணத்தைவிட முக்யமான கருத்து வளமான சொல் பிரயோகம் பற்றித்தானே? அந்த சொற்கள் இலக்கணக் கட்டுக்குள் திணிக்க முடியாத வகையில் நீளமாகவோ குறுகலாகவோ சொல்பவன் மனசிலிருந்து தோன்றிவிட்டால்? உதாரணத்துக்கு, வெண்பா முடிவு 'தீ' என்றது போன்ற சொல்லுக்குத்தான் இடம் தரும். ஆனுல் அவ்விடத்தில் விழவேண்டும், என்று மனசிலிருந்து வந்த சொல், வேறு அர்த்தத்தில் வேறு வேகத்தில் வேறு அளவில் பிறந்து விட்டால்? மீண்டும் கவிதையை முதலிலிருந்து செதுக்க வேண்டும் அல்லவா? முதலில் ஏற்கனவே பிறந்த சொல் 'அதிகப்படியான சக்தி' யோடு தான் வந்தது, ஆனுல் 'அந்தக் கட்டுக் கோப்புக்குள் இருக்க முடியாமல் பிதுங்குகிறதே! இந்த இடத்தில் தான் சுயேச்சை தேவை! சொற்களை, உணர்ச்சியை அர்த்தத்தை, சர்வாதிகாரத்திற்கு உடன்படச் செய்யாமல் எழுதுகிறவனுக்கு விடுதலை தேவை!

இடையில் ஒன்று: முந்தியெல்லாம் கவிதை சொன்னவர்கள் வசன—புதுக்—கவிஞர்கள் மாதிரி சிரமப்படாமல் வார்த்தைகளைக் கொட்டினர்களே எனலாம் அவர்களுக்கு உபயோகத்தில் இருந்த சொற்களை விட அதிகமாக சொற்கள் தெரிந்திருந்தன. அப்படி உபயோகத்துக்கு மீறின சொற்களில் கவிதை சொல்ல விரும்பாததும் இன்றைய வசன—புதுக்—கவிஞர்களின் ஆசை. அவர்கள் கவிதைகளைப் படித்தால் புரியும். சிதம்பர ரகுநாதனே, சப்தத்தில் லயித்து எழுதுவதால் 'கொலோ' என்பது போன்ற சம்பிரதாயமான செத்த சொற்களை யெல்லாம் கவிதையில் பிரயோகிக்கிறுர். இலக்கியம் நடைமுறைப் பாஷையில் இருக்க வேண்டும் என்பது புரிந்து கொண்டானது அல்லவா?

கடைசியாக: 'வசன கவிதை' என்பது மேல் நாட்டாருக்கே புரியாத சரக்கு என்று சொல்லி, டி. எச். லாரன்ஸிலிருந்து எடுத்த முகவுரையால் ரகுநாதன் காட்டுகிறுர். புரியாவிட்டாலும் அது இலக்கியம் தான். ரகுநாதனே அது ''அழகிய வசன இலக்கியம்தான்'' என்கிறுர். ஆனுல் கவிதை அல்ல என்கிறுர். கட்டுரைமுற்பகுதியில் நான் அது

வசனம் அல்ல என்றதற்குக் காரணம் சொன்னேன். ஆகவே வசன கவிதை ஆகிறது. ' அதுதான் கவிதை இல்லை என்றேனே ' என்று ரகுநாதன் மீண்டும் முறைக்கிருர். அப்படியானல்—" கவிதா வசனம் " —' வசனம் ' தானே ? ஏன் அதைப் ' பின்பற்றக் ' கூடாது ?

அந்த ' தகுதியான எடைகோலை ' தனி மனிதர் கையில் கொடுக்கக் கூடாது. ஏனெனில் அவருக்கும் ' அபிப்பிராயங்கள் ' இருக்கலாம். அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதில் உள்ள திறமையையும் ஸ்திரமாக்கும் ஆணித்தர மனப் பாங்கையும் பொறுத்து உண்மையைப் பற்றிய முடிவு இருக்கக் கூடாது. ரஸனை, விமர்சனம் சம்பந்தப்பட்டால் 'மூவாயிரம் கட்சிக'ளேனும் இருக்கலாம். ஆனல் பாஷைப் பிரயோகம், உருவம் பற்றிய பிரச்னை முதலியவற்றிலுமா என்று சந்தேகப்படுகிறேன். ஏனெனில் இப்படி அடிப்படையான வற்றிலேயே விவகாரங்கள் ஏற்பட்டால், ஏன், ' தமிழ் கதைகளை தமிழிலே எழுதுவதா, ஹிந்தியில் அல்லது இங்கிலீஷில் எழுதுவதா ' (ஆர். கே. நாராயண் தமிழ்க் கதைகளைத் தானே இங்கிலீஷில் எழுதுகிருர்) என்பதிலெல்லாம் கூட விவகாரம் வந்து விடும்--சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் ! ' இதென்ன அசட்டுக் கேள்வி, வெளிப்படுத்தப்படும் விஷயம் தமிழ் விஷயம் தானே.—தாகூரைப்பாரேன் ' என்பது போன்ற ' எல்லாரும் ஒப்புக்கொள்ளும் ' ரீதியில் ' தமிழ்க் கற்பனையை மொழி பெயர்த்தல் ' என்று ஏற்றுக் கொள்கிற மாதிரி அடிப்படை விஷயங்கள் வந்தால்தான், ' தனி மனித அகநோக்கான ' விஷயங்களை மோதவிட்டு (அவற்றுக்கு சுலபத்தில் முடிவுகாண முடியாவிட்டாலும்) ஒரு பூர்த்தியை நோக்கி நகர அதிக வேளை இருக்கும்.

' இதென்ன அசட்டுக் கேள்வி ' என்று, எழும்புகிற சந்தேகம் அமுக்கப்படுகிற அளவுக்கு அடிப்படை விஷயம் பற்றி ஏகோபித்த நோக்கு இருக்கலாம். அதில் சிரமமில்லை.

கலைஞன் தன் உளப்பாங்கிற்கும், புதுமை நாட்டத்துக்கும். சக்திக்கும் (பாரதி தன் வசன கவிதையைக் கவிதையிலேயே தர முடியாமல் தான் இந்தப் புதுத்துறைப் பிரஸ்தாபத்துக்கு அடியெடுத்துக் கொடுத்தார்—ரகுநாதன் பு. பி, கவிதைகள் முன்னுரை. இயைய ஒரு புது உருவத்தை நாடலாம் அது காலத்தால் மடியத் தக்கதா ஏதும், தீமை விளைவிக்குமா, பாரதி உரை நடை தீமை தரும் உரைநடையாமே ! என்பதை வைத்துச் சண்டை போடுவதிலும், கலைஞனின் சக்தியையும் ஆசையையும் முன்னிறுத்தி விவரதம் நடத்துவதே பெருந்தன்மையானது. அவனது முயற்சி பற்றிய முடிவு உண்மைக்கு மாருக 'நல்லது' என்று ஏற்றுக் கொண்டாலும் நாம் நம் முடிவால் கலைப்படைப்பின் சுயேச்சைத் தன்மைக்குத் தீங்கு விளைவிக்காமல் ஒதுங்கி விடுகிறோம். உண்மையாக அது 'நல்லது'க்கு மாறுபட்டால் நிச்சயமாக காலத்தினல் அது அழிந்து விடும். ஏனெனில் இலக்கியவெற்றி பெறும் கலைப்படைப்பு வெளியிடப்படும் விஷயரீதியாக மட்டுமல்ல உருவரீதியாகவும் ஒரு ஒத்த சக்தியுடையதால் தான் போற்றப்படுகிறது. ' காட்சி ' உருவ ரீதியான வெற்றியும் கூட என்று இல்லையா ?

ஆகவே தான், ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்த முயற்சிக்கும் விதத்தில் ஏற்படும் வெற்றி தோல்விகளை வைத்து முடிவைச் சட்டென அனுமானிக்கக் கூடாது. வசன கவிதையிலும் ஏதும் விஷயம் இருக்கலாம் ' என நம்பியவர் அதைப் பற்றிய விளக்கம் தன் கருத்துக்கு மாறுபட்டிருப்பதால் விளக்கம் எந்த விஷயத்துக்காக வந்ததோ, அதையே ஒதுக்க முயல்வதிலும் பார்க்க, அந்த ' ஏதும் விஷயம் இருக்கலாம் ' என நம்ப வைத்ததின் சொந்த நோக்கிற்கு எது அடிப்படை என்று சொல்லலாமே !

' வானவில் என்ருல் இந்திரவில் ' என்றதைக் கேட்டு ' இந்திரனவது வில்லாவது—அது புளுகு ! ஆகவே வானவில்லும் புளுகு ' என்று சொல்வது போல அபிப்பிராயங்கள் பரிமாறப்படக்கூடாது. வானவில் அபிப்பிராயபேத வெளியீடுகளால் ஓடிப்போகாதே-- முழித்துக்கொண்டு இருக்கிறது இருக்கத்தானே செய்யும்.

நான்

நான்
சோம்பலின் தொண்டனல்ல;
சுறு சுறுப்பில் எறும்பும் இல்லை.

நான்
தூங்கிக் கிடக்கவுமில்லை;
' விழு விழு என்று '
வேலை செய்து
அலுப்புறவும் இல்லை.

நான்
குழந்தை போல்
எதிலும் அதிசயம் காண்பதால்,
வேடிக்கை பார்த்து
நின்று விடுகிறேன்.
ஓடும் கால உணர்வு அறிவேனில்லை.

நான்
மாணவன் போல்
படிப்பில் ஆர்வம் காட்டுகிறேன்;
அதனல் செயல் திறம்
மறந்து போனேன்.

நான்
கடவுள் போல்
கவலையை உதறினேன்;
களிப்பே கொண்டேன்.

வல்லிக்கண்ணன்

குருட்டு ஆந்தை

லக்ஷ்மீபதி

கல்லும் முள்ளும் அடர்ந்த காட்டுப் புதருக்குள் மந்திரக்கிளியை ராஜகுமாரன் கையில் எடுத்துக் கொண்டு செல்லும் போது ஆந்தைகள் அலறும். அந்த மாதிரிதான் இந்தக் கதை தொடங்குகிற போது ஒரே ஒரு ஆந்தை அலறுகிறது.

பட்டப்பகலில் மெழுகுத்தாரின் வெப்பமூச்சு பஸ்ரூட்டு எங்கும் மேலே கிளம்பிக் கொண்டிருந்தது. அந்தக் கார்ப்பரேஷன் பள்ளியின் கிணற்றடி மேட்டின் பக்கம் வளர்ந்துள்ள குண்டு முத்துமர இலைகள் மூச்சுத்திணறியவர்களைப் போல அசையவில்லை. பள்ளியை அடுத்து மாடிப்படிக்கட்டுகள் தலை வாசலிலேயே கொண்ட ஒரு தனித்த அடையாளத்தை உடைய முதல் வீட்டில் ஒரு பையன் வாசலில் நின்று கொண்டிருந்தபடி ஆந்தையின் அலறலைக் கேட்டான்.

"பகல்லே கண்ணு தெரியாது. அதனாலே கத்துது." மேல்வாசல் படியில் இருந்த தன் அப்பாவிடம் சொன்னான். பையன்: கொஞ்ச நாளைக்கு முன்னே ஆந்தையைப் பற்றிய கதையும் விவரமும் கேட்டது அவனுக்கு ஞாபகம்.

"பஸ் போறது தெரியுமா இந்தக் குருடுக்கு? அதோ ஆஸ்பத்திரிக்குள்ளே டாக்டரு நிக்கறூர். இங்கே வெள்ளையா நர்சுங்க போறாங்கள். இதெல்லால் பார்க்கெல்லே இது. குருட்டுத்தனமா அலறுது"

பகலிலும் உலகை விழித்துப் பார்க்காத ஒரு அசட்டு உயிராகத் தன் மகனுக்கு ஆந்தை மனசில் பட்டதை ரசித்தார் அவர்.

"ஆமடா, கண்ணுக்கு முன்னாலே உலகம் காணத் தெரியாதவங்களைச் சேர்ந்தது இந்த ஆந்தை."

அப்பாவின் வார்த்தைகளுக்குப்பொருள்சிறியவனுக்குத் தெரிய நியாயமில்லை. அவன் சுட்டெரிக்கும் பிளாட்பாரத்துக்கு ஓடி வந்து குண்டு முத்து மரத்திலிருந்த ஆந்தையை அண்ணாந்து பார்த்து உடனே வெடுக்கென்று திரும்பினான். "பகல்லே கண் தெரியாத குருட்டு ஆந்தை!" மீண்டும் அவன் குரல் எழுப்பினான்.

அதே நேரத்தில், பிடித்துக்கொண்டு வந்த குடையை மடக்கிய ஒருவர் பையனிடம், "அப்பா இருக்காரா?" என்று கேட்டபடி அந்த வீட்டு வாசலை மிதித்தார்.

"அப்பா இருக்கார் அதோ!" பையன் சொல்லி முடிக்கவில்லை, 'திங்கள்' பத்திரிகையின் ஆசிரியர் செல்லப் பாண்டியனை வரவேற்றார் சிற்சபை.

"என்ன பேசிக்கிட்டிருக்கான் உங்க பையன்?" என்று வழக்கம்போல் சிற்சபையின் மகனிடம் ஒரு பேச்சுக் கொடுத்து விட்டு மாடிப் படிகளில் ஏறிவந்தார் செல்லப் பாண்டியன்.

"இன்னிக்கு மூணரை மணிக்கெல்லாம் சகாதேவன் வருவதாக எனக்குப் போன் செஞ்சிருக்கார். அவர் வந்து ரெண்டு நாளாச்சு. நீங்க அந்த நேரத்துக்கு எங்க வீட்டுக்கு நேரே வந்திடுங்க. பாக்கி புரூப் திருத்த இருக்குது. நான் இப்போ பிரஸுக்குப் போயிட்டிருக்கேன்." வந்ததும் வராததுமாக வேட்டு வெடிப்பது போல் பேசினார் செல்லப்பாண்டியன்.

மகன் ஆந்தை அலறியதைக் கேட்டு அதைப் பார்க்க ரோட்டுக்குப் போனதையும் ஆந்தையைப் போல் கண்களின் முன்னே காணுகிற உலகே தெரியாத மனிதர்களைப் பற்றித் தாம் சொன்னதையும் நினைத்தபடியே ஆழ்ந்திருந்த சிற்சபைக்கு யார் சகாதேவன் என்று மனசில் வரவில்லை. எந்த சகாதேவன் என்று அவருடைய வாயும் தவறிக் கேட்டு விட்டது.

"அவர் தான் திங்களில் எழுதறவர்". மனசின் அலைவட்டம் அதைக்கேட்டதுமே குறுகி வந்த போது தான் சகாதேவன் ஞாபகம் பளிச்சிட்டது சிற்சபைக்கு.

"செஸ் ஆட்டத்தில் காய்களை நகர்த்துவது போலச் சொற்களை மௌள்ள ஆரப்பொறுத்து நகர்த்துவாரே அந்த சகாதேவனோ? வந்து போன மகாபாரதப் பத்திரங்களைத் திரும்ப மரபு உணர்ந்து படைப்பவர் தாம் ஒருவரே என்று தம்பட்டம் அடித்தாரே அந்த சகாதேவனா? புதிய வகையில் சந்தமும் ஒலிநயமும் அமைக்கிறாராமே அந்த சகாதேவனா?" சிற்சபை தமக்குள்ளேயே தீட்டிப் பார்த்துக் கொண்டார் ஒரு புதிய உருவத்தை. அந்த உருவம் இலேசாகத் தோன்றிய இடத்தில் அவர் மகன் காட்டிய ஆந்தையின் உருவம் நின்றது. எது எதை அமிழ்த்தி மேல் எழும்பும் என்று சிற்சபைக்கே தெரியவில்லை. ஏன் இப்படி நினைவுகள் திணறி ஒன்றையொன்று முட்டுகின்றனவோ?

"என்னங்க, சிற்சபை! வரயோசனையா? வேறே எங்கே புரோகிராம்? ஜெர்மன் எம்பசி

யிலே இன்னிக்கா நாடகம்? அவசியம் சகாதேவ னைப் பார்க்க வாருங்க. ஒண்ணு சொல்லிக் கொள்றேன். அவரைக் கண்டு ஏதாவது எக்குத் தப்பா மாட்டிவிடாதீங்க. ஆமாம். நம்ப இலக்கிய வழியிலே நடக்கிறவராச்சே.''

'' எனக்கு அவசியம் சகாதேவனைப் பார்க்க ணும். சரியா நேரத்திலே நானே.........''

இது சொல்லிச் சிற்சபை முடிப்பதற்குள் திங்கள் பத்திரிகை ஆசிரியர் விடைபெற்றுக் கொள்ளாமல் நகர்ந்தார். அவருக்கு இரண்டு மூன்று நாட்களில் பத்திரிகையைக் கொண்டு வந்து விட ஒரு பொறுப்பு இருந்தது. கொஞ்ச நஞ்சமா அவர் பாடுபடுகிறார் நவீன இலக்கியத் துக்கு? அவர் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்ட தைப் பொருட்படுத்தத் தோன்றுமா? வாசல் வரைக்கும் ஒன்றும் பேசாமல் சிற்சபை அவரைத் தொடர்ந்தார்.

கீழ்ப்படிகளில் இறங்கி மறுபடியும் வரச் சொல்லிக் குரல் கொடுத்தார் செல்லப்பாண்டி யன். பையும் கையுமாக மடக்கிய குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு தமிழின் புதிய சகாப்தப் பெருமகன் நடந்து சென்றதைப் பார்த் துக் கொண்டே பெருமூச்சு வாங்கினார் சிற்சபை. பழைய இலக்கியப் பரிச்சயம் சிற்சபைக்கு அதிகம். தம்மை நவீன பாணிக்கு இழுத்தவர் செல்லப் பாண்டியன் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். அது போலவே பழசின் பக்கமும் கண்ணைத் திரும்பவையுங்கள் என்று சிற்சபைக்குக் கூறும் இலக்கிய நண்பர் அவர்.

வெளி வராந்தாவைத் தாண்டி வந்து கொண்டே சிற்சபை தம் சாயங்காலத் திட்டத்தை உரக்கக் கூறினார். இலக்கியப் பேச்சு என்றால் எதிர்ப்பு எந்த நாளிலும் அவர் வீட்டில் கேட்காது. அவர் மகன் வழக்கம் போலக் கண்ணை உருட்டி முறைத்துக் கொண்டது தெரிந்தது. அஸ் காவுக்கு அலையவேண்டிய அவசிய நேரத்திலே இலக்கியப்போரில் வெற்றிக்கொடி நாட்டி வரப் போகிறதாக ஒரு முணுமுணுப்பு சமையற்கட்டிலி ருந்து அவரும் எதிர்பாராமல் அன்று கேட்டது. என்ன இது காலத்தின் அலங்கோலம்? சிற்சபை யின் இந்த உட்குரல் வீட்டு வெளியில் கேட்டி ராது.

ஜமுக்காள விரிப்பின் ஒரு ஓரம் சுவரில் சாய்ந் திருந்தவர் சகாதேவனாகத்தான் இருக்கவேண்டும் என்று சிற்சபை வணக்கமிட்டு உட்கார்ந்தார். அவரை வரவேற்ற செல்லப்பாண்டியன் அடுத் தடுத்து முகமன் சேதிகளைக் கேட்க வைத்துத் தாமும் விசாரித்தார்.

இலக்கியப் பேச்சுக்கு ஒரு தனிப் புகலிடம் அந்த அறை. வெளி அரவம் காதுக்குப் படவே படாது. ஒரு கார் போகிறதா லாரி புறப்படு கிறதா என்று அறிய முடியாத கப்சிப் நிலவும் இடம் அது. கரகரப்பான அதிவேகப் புறஉலகை மறந்து புதுமைப்பித்தனை, கு. ப. ரா. வை, லா. ச. ரா. வை நினைக்கலாம். மவுண்ட்ரோட் டில் பிரபலமான புதிய டெர்லினை, இச்காக்கின் திகில் படைப்பை, நவீன முதுகுப்புறத்தின் சோளிப் பொத்தானை அறவே மறந்து அழகும் சத்தியமும் ஒருங்கே கூடியிருக்கும் புதிய இன்ப உலகில் நெடுநேரம் வாழலாம்.

சகாதேவன் இவர் தானா? வற்றி உலர்ந்த முன் வளைந்த சரீரம். ஒரு அலட்சியப் பார்வையும் பார்வையில் ஒரு கூர்மையும் சிமிட்டலும், எதுக் கும் ஒரு முட்டு வைத்துப் பேசுகிற-எதிரில் இருப் பவரை ஆழம் பார்த்து வார்த்தை ஆடுகிற சுபாவம்.

சகாதேவனுடனும் இன்னொரு சகாவுடனும் செல்லப்பாண்டியன் திருமூர்த்தி வீட்டுக்குப் போய் உரையாடியது நேற்று முன் தினம் தான். பேச்சுவாக்கில் இந்திய எழுத்தாளர்களுக்கு இன்றைய பார்வை எப்படி இருக்கிறது நியாயம் என்பதில் கருத்துப் பரிமாறுதல் நடந்தது. தற் கால வாழ்க்கையில் காண்பது சுகவீனம், ஒரு மன முறிவு என்பது சகாதேவனுக்கும் அந்தச் சகாவுக் கும் எண்ணம். வளரும் பருவத்தில் சிறுசிறு மனப் பிரச்சனைகள் வரும். நோய்ப்பட்டு விழுந்து விட்டதா இந்தியா? இரண்டு மகாயுத்தங்களைக் கண்ட மேற்கத்திய குழப்ப உலகு வேறு. நம்மது தனி மனித, சமூக வாழ்நிலையில் வளர்பருவ உலகு. நோயிலே படுத்திருந்து நோன்பிலே உயிர்க்கும் புத்துலகு. இந்தப் பார்வை அடிப்படையில் விழாத எழுத்தாளர்களை நடப்பு வாழ்க்கை ஏமாற்றி விட்டது என்பது திருமூர்த்திக்கு அசைக்கமுடி யாத கருத்து. ஆகவே சகாதேவனைச் சந்தித்த முதல் காட்சியிலேயே முக்கால உணர்வுடன் உலகம் ஏய்த்து விட்டது அவரைப்போன்றவர் களை என்று திருமூர்த்தி கூறினாராம். அடுத்தும் ஒரு கூர் அம்பு பாய்ந்தது. சகாதேவனின் வசப் படாத நோய் உடம்பும் பேச்சுக்குப் பொருளா யிற்றும்.

சிற்சபை தாம் அன்று வரமுடியவில்லை என்று நினைத்து வருத்தப்பட்டார். ''படீரென்று சகா தேவன்,'' திருமூர்த்தி கவிஞர் இல்லை..அதை நான் எழுதத்தான் போறேன். நீங்க கட்டுரையைப் போடுவீங்களா?'' என்று அலட்சிய நகைப்பு வெளித்தோன்றக் கூறினார்.

அண்டசராசரம் தலைகீழாய் உருண்டு விழுவது போல் இருந்தது சிற்சபைக்கு. மண் வெட்டியை எடுத்து ஒழுங்காக வீட்டின் கொல்லைப்புறம் வெட்டி ஒரு வாழைக் குருத்தை நட்டு வைத்து அது பூத்துக்காய்க்கப் பார்த்த பிறகு, ஒரு அழுக்கான கரம் அதை வேரோடு பிய்த்துப்போட வந்தால் அதைப் பார்க்க எப்படி இருக்குமோ அப்படி மனப்புயல் வீசிற்று சிற்ச பைக்கு.

திருமூர்த்தி யாப்புக் கட்டற்ற புதுக் கவிதையில் சாதனை காட்டியிருக்கிறார். அளவு நீண்ட பாட்டுக்களைக் கணிசமாக உருவாக்கித் தந்திருக்கிறார். அவர் பார்வையில் சில சமயம் பழசின் மதிப்பு விழுந்திருந்தாலும் புத்தம் புதிய வாழ்க்கையின் மதிப்புக்களையும் அவர் கலையழகுடன் படைத்துத் தருவது உண்மை.

திருமூர்த்தி என்ன ஜோதி இராமலிங்கரைப் போன்றவரா ! பாரதியே இராமலிங்கரைக் கடந்து வந்தவர் அல்லவா ? திருமூர்த்தியின் கவிதையிலா நம் சமகாலச் சத்தியம் இல்லை ? பழைய கவிதையில் போலவே சந்தமும் நயமும் திருமூர்த்தியின் கவிதையில் அமைந்திருக்கின்றன என்று சொல்லவே முடியாது.

சந்தம் என்றால் நயம் என்றால் விளங்காதவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் திருச்செவி என்ன செவியே ? இது என்ன நினைவுப் பாதை தடம் புரண்டு போகிறது ? திடீரென்று காலையில் தம் மகன் காட்டிய ஆந்தையின் உருவம் சிற்சபையின் மன அலையின் மேலே மங்கி எழுந்தது

ஒரு பாட்டில் 'கீழே விழுந்தான்' என்ற தொடரை எழுதவேண்டுமானால் விழுந்ததைக் காட்டும் வகையில் ஒவ்வொரு எழுத்து எழுத்தாகக் கீழ்வாக்கில் வி என்றும், அதுக்கும் அடுத்த வரியில் ழு என்றும், பிறகு ந்...த...து என்றும் சொல்லே விழுந்தது போலச் சித்திர முறையில் விசித்திரம் காட்டினால் அதிலே நவீன பாங்கின் சந்தமும் நயமும் என்ன எப்படி இருக்கமுடியுமோ ?

சிற்சபையின் முன்னால் கவிதை உலகம் ஒரு காகிதப் பலூன் போலவும் அதுக்குள் ஒரு சின்ன ஊசி செருகுவது போலவும் தோன்றியது. இப்படி எக்கச் சக்கமாகவா தமிழில் புதுக் கவிதை மாட்டிக் கொண்டு விழிக்க வேண்டும் ? சிற்சபையால் நினைவுத் திரையில் நடந்த நிகழ்ச்சிகளை விட்டு வேறெங்கும் தம்மைத் திருப்பவே முடியவில்லை. இந்த நேரத்தில் நினைவுத் திரையை வட்டமிட்டு அதை உருக்குலைக்க வேகமாகத் தனது சிறகடித்து ஆந்தை அலறியதும் தான் சிற்சபை சற்றே சுதாரித்து உட்கார்ந்து கொண்டார்.

செல்லப் பாண்டியனின் விமர்சனக் குரல் கேட்டது அச்சமயம். அவருக்கு நெருங்கிய சொந்தமான சுப்புவும் வந்து பேச்சில் கலந்து கொண்டார் அச்சமயம். ஒரு கவிஞரைக் கவிஞர் இல்லை என்று அபிப்பிராயப்பட்டால் போதுமா ? ஏன் என்று வாசகர்கள் விளங்கிக் கொள்ள ரசனையுடன் ஆய்வு செய்ய வேண்டாமா ? இக்கேள்விக்குச் சகாதேவன், மனசில் தான் உணர்ந்து நல்லது என்று கண்டதை இது நல்ல படைப்பு என்று மட்டும் சொன்னால் போதும் என்று பதில் சொன்னார்

இப்படி 'நான் நல்லது கெட்டது என்று உணர்ந்து விட்டேன், நீயும் அப்படியே பார்' என்ற தோரணையில் விமர்சனம் செய்வதாகக் கூறிக்கொள்பவன் அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டால் போதாது என்று சிற்சபைக்குப் பட்டது. அப்படிக் கூறும் விமர்சனம் செய்பவனை எப்படி உண்மை சொல்கிறான் என்று நம்ப முடியும் என்று தோன்றியது சிற்சபைக்கு. ரசித்ததைத் தக்க ஏதுக்களுடன் ஆய்வுடன் எடுத்துக் காட்டி விமர்சிப்பதால் தான் ஆழ்ந்த ரசனையை வாசகர்களிடமும் தோற்றுவிக்க முடியும் என்று சிற்சபை அந்த விவாதத்தில் பேசிக் கலந்து கொண்டார்.

சகாதேவனுக்கு எப்படியும் தமக்கு வெற்றி கிடைக்காது என்று தெரிந்து விட்டது. வேறு வழியில்லாமல் தம் சகா ஒருத்தருக்காகவே கட்சி கட்டிப் பேசியதில் என்ன லாபம் ? போதாக் குறைக்கு சுப்புவும் காது பளீரென விவாதிக்கத் தொடங்கினர். சங்கப் பாட்டுக்களைப் பற்றி நினைக்கச் சகாதேவனே பிறகு திசைத்திருப்பிக் கொண்டு சங்கப்பாட்டுக்களில் பல ஒன்றைப் பார்த்தால் ஒன்று போல ஒரே டைப்பாக இருப்பதாக அபிப்பிராயம் வெளியிட்டார்.

செல்லப்பாண்டியன் சிற்சபையைப் பார்க்கவும்ஏனோமுகம் வெறித்துவெளிறியவராக ஆந்தை அலறியதை எண்ணமிட்டபடி சங்கப் பாட்டுக்களின் படிம அழகையும் உள்ளுக்குள் கண்டு மகிழ்ந்து சிரித்தார் சிற்சபை.

சுடுகாட்டுக்குப் போகிற வழியில் மேசை நாற்காலிகள் என்ற நவீன சாதனமே அற்ற இருட்டறை கொண்ட வீட்டில் குடியிருக்கிறார் திருமூர்த்தி என்று திருமூர்த்தியின் வாழ்க்கையைக் கேலியாக்கின சகாதேவன் தானே இவர் ?

இது ஏதடா 'ஒரு மாதிரி' இருக்கிறதே ! சிற்சபை நினைத்ததை வார்த்தைகளில் வெளியிட்டு விட்டதும் செல்லப்பாண்டியனின் நடுநிலையான நயவுரை மேலே சொல்ல விடாமல் சிற்சபையைத் தடுத்தது.

விருந்துக்கு உட்கார்ந்ததும் பேச்சு மூவருக்கும் ஏனோ தடைப்பட்டது. ஒன்பதுக்கு மேல் கடிகாரம் மணி காட்டியதும் தான் தாமதம் சகாதேவன் விடைபெற்றுக் கொண்டார்.

தேர் ஓடும் அந்த வீதியில் பஸ் வராது. அதனால் பெரிய ரோட்டைக் கடந்து உள்தெருக்களில் திரும்பி ஒரு அரசியல் மேடைத்திடலின் பக்கம் மூவரும் மெதுவாக ஊர்ந்து கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்தைத் தாண்டிச் சிற்சபையின் வீடு வரைக்கும் நடந்தே வந்தனர். திருமூர்த்தி கவிஞர் இல்லை என்றும், ஒரு இலக்கியப் படைப்பைப் பற்றி நல்லது அல்லது நன்றாய் இல்லை என்று அபிப்பிராயம் விளம்பினால் விமர்சனத்தில் போதும் என்றும், சங்கப் பாட்டுக்கள் ஒரே சீரியல் டைப் என்றும் தாம் முந்தி உதிர்த்தவைகளையே திரும்பவும் சரணப்படுத்தி நடுவே சொந்த வாழ்க்கையின் ரகசியங்களையும் அம்பலப்படுத்திப் பேசிய படியே நடந்தார் சகாதேவன்.

ஒரு மின்சார விளக்குக் கம்பத்தில் சிற்சபை சாய்ந்தார். பஸ் நிற்குமிடத்தின் சிமிட்டித் தூணைக் கைத்தாங்கலாகப் பிடித்து நின்றார் சகாதேவன், செல்லப்பாண்டியன் விருந்தினரை வழியனுப்பும் சம்பிரதாயத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்.

இன்று வரும்

சி. மணி

இன்று வரும்
கடிதம் இன்று வரும்
தப்பாமல் இன்று வரும்
நேற்றில்லை அதனால் இன்று வரும்,

கடிதம் வந்தால்
காலோடி கரம் வாங்க
வளையோடு உடலாடும்
உடலோடு உயிராடும்.
கடிதத்தில் என்னவரும் ?
துடிக்கின்ற உள்ளத்தில்
வடித்தது தானே வரும் ?
நான் தந்த மயக்கத்தில்
அவர் மயங்கி வரைந்திட்ட
மயக்கம் தரும் செய்தி வரும் !
செய்தியெல்லாம் சொல்லாகி
சொல்லெல்லாம் உயிர் பெற்று
நெடுந்தோகை விரித்தாடும்;
ஆட்டத்தில் திளைத்த உடன்
பாதியிலே நிறுத்தி விட்டு
எல்லா மோடி மறைந்து விடும்.

அந்நிலையில்
என் கண்ணில் தெரிவதெல்லாம்
என்னுள் இருப்பதாகும்;
என்னுள் இருப்பதுவோ
நல்ல ரயில் மனம், சென்ற
வழியிலே செல்லும் மனம் !

இதென்ன நீராத் தாகம்
நாறும் கொல்லும் தாகம் !
சொன்னதையே திரும்பச் சொல்லும்
வெவ்வேறு வழியில் சொல்லும்
கடிதமே என்றாலும் அதனிடம்
ஏனிந்த நிலவின் கவர்ச்சி ?

அதோ !

பார்க்காமல் போகின்றான்
திரும்பிக் கூடப் பார்க்காமல்
போகின்றான்; போகட்டும்.
இன்றில்லை,
கடிதம் இன்றில்லை:

மெல்லுடல் குலுங்க
நல்லுடை நலுங்க
ஓடுவதில்லை;
தளிர்கை குளிர
வெளிர்முகம் மிளிர
வாங்குவதில்லை;

நெஞ்சகம் பொங்க
மார்பகம் வீங்கத்
திரும்புவதில்லை;

நினைவு சூழ் அறையில்
மீட்டிய விரல் நடுங்க
ஒட்டிய உறையதைக்
கிழிப்பதில்லை!

மடலை வெளியெடுத்து
உடனே பிரித்திடாது
கற்பனை திருகிவிட்டு
மயங்கு வதில்லை;
இல்லை இல்லை
இன்று ஒன்று மில்லை
இல்லை கடிதமில்லை:

விழியில் ஒளியேறு வதில்லை
முகத்தில் சிவப் பேறுவதில்லை
மனத்தில் துடிப்பேறுவதில்லை
வாழ்வில் பிடிப்பேறுவதில்லை
என்னுடல் மேனியெல்லாம்
மயிர்க்கால் கண்ணெல்லாம்
களிமயக்கச் சிலிர்ப் பூறுவதில்லை,
இல்லை ஒன்றுமில்லை.

நாளைவரும்
கடிதம் நாளை வரும்
தப்பாமல் நாளைவரும்
இன்றில்லை அதனால் நாளை வரும்.

கனவுப்பறவை

சிறுகதைகள்

கர்ணன்

எழுதியது

வெளிவந்துவிட்டது

விலை ரூ. 2-50

கிடைக்குமிடம் :

எழுத்து பிரசுரம்

19—A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை - 5.

விழிப்பு

நா. வெங்கட்ராமன்

வாலிபம் விழித்தெழுந்த போது நெஞ்சை நிமிர்த்தி அண்ணாந்து பார்த்தேன்.

வானத்தில் கன்னிகள் ஏழுபேர் நிலாவை ஏற்றி இருள் மெத்தை பரப்பி, கண்களைச் சிமிட்டி, இடைகளைக் குலுக்கி அழைத்தனர்.

பெற்ற தாயை மனம் கிறங்கி உதறிவிட்டு மேலெழும்பிச் சென்றேன். இரவு முழுவதும் எழுவரின் போகத்தில் என் மோக நெருப்பு தணிய—

கிழக்கு வெளுத்தது.

பார்த்தால் நான் ஆளே உருமாறி ஒரு மேகமாகி விட்டிருந்தேன். இரவெல்லாம் இன்பம் தந்த மோகினியர் ஏழு பேரும் போன இடம் தெரியவில்லை.

நட்டாற்றில் கை விட்ட நன்றி கெட்ட பெண்கள்! எங்கு போவது? கன்னிகள் செய்த மோசத்தை எண்ணி பெருமூச்சு விட்டுக் கொண்டே சூரியனின் பாதையில் (அது அவன் பாதையா?) சுருண்டு கிடந்தேன்.

முதுகில் ஏதோ முள் போல் ஏறவும் திரும்பிப் பார்த்தேன். சூரியன்! ஜகத்ஜோதியாக ஒளிர்ந்து நின்றான். கையில் பொன்னால் செய்த தராசு ஒன்றை பிடித்துக் கொண்டிருந்தான். அதன் முள்ளால் தான் என்னைக் குத்தினான்.

'கடமை என் கண்கள், வழி விடு' என்று வலித்தது.

அவனிடம், "வானத்துப் பெண்கள் போன வழியெது?" என்றேன் கெஞ்சாக் குறையாக.

புருவங்களை நெரித்து, பொன்வாளை ஓங்கி, "போய் விடு தாயிடம்" என்றான்.

மறுபடியும் கெஞ்சினேன். அழுகை முட்டிக் கொண்டு வந்தது. என் கண்களிலிருந்து கண்ணீர் கூட உதிர்ந்தது.

இதற்கு முன் நான் கண்ணீர் விட்டதே கிடையாது. ஆண்பிள்ளை அழலாமா?

என் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் உருள்வதைக் கண்டு நானே பதைத்துப்போனேன்.

தலைச்சன் குழந்தையைப் பார்ப்பது போல கண்ணீரையே பார்த்ததில் என்னையே அதில் இழந்து நானே என் கண்ணீர்த் துளிகளில் ஒரு துளி ஆகிவிட்டேன்.

மேகமாய் இருந்த நான் சூரியன் கோபத்தில் கரைந்து கண்ணீர்த்துளியாய் மாறினபோதும் அவன் என்னை விடவில்லை. 'போ, தாயிடம்,' என்று கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினான்.

விண்ணிலிருந்து உருண்டு மண்ணை நோக்கி வந்து கொண்டிருக்கும் போது என் இளமை நினைவுகள் எல்லாம் திரைப்படம் போல் நெஞ்சில் பளிச்சிட்டு மறைந்தன. அன்னையின் மடி அத்தர் போல் மணம் வீசியது. உள்ளம் மகிழ்ந்து கீழே பார்த்தேன்.

நீலக்கடல் விரிப்பு! எங்கு பார்த்தாலும் எண்காலிகளும், சுறுவும், எராலும், வராலும் வாயைத் திறந்தபடி அலைந்து கொண்டிருந்தன. எதன் வாயில் முடியப் போகிறேமோ ஈசா என்று கண்களை இறுக்கி மூடிக்கொண்டு சாவைச் சுவைக்கத் தயாரானேன்.

மெத்தென்ற வாய் ஒன்றில் புதைகையில் சாவே ஒரு வெல்வெட்டோ என்று தோன்றியது. திடீரென்று "கண்ணே, கண்ணீரே, கண்ணில் நிலைத்த அஞ்சனமே, குளிரமுதே" என்ற சொற்கள் இலவம் பஞ்சாய் செவியை வருடின.

அட! இன்னும் நாம் சாகவில்லையா?

"என்னைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டு இதம் தரும் நீ யார்?" என்று கேட்டேன்.

"சிப்பி" என்றது.

சிப்பியுள் இறுகி, வை கறை ஒன்றில் வலைஞன் கை வழி வீதிக்கு, வியாபாரிகளின் சன்னிதானத்துக்கு வந்தேன்.

ஏதேதோ இன்பமாளிகைகள் கட்டிக் கொண்டு இறுமாப்பில் என்னையே நான் பார்த்துக் கொண்டேன்.

பார்த்தால் தேகமுழுவதும் ஏழு வகை மேகச் சாயல்! மேகப் பெண்கள் தந்த போகச் சின்னங்கள்! பழய 'நான்' எங்கே?

என்னையே எனக்கு அடையாளம் விளங்காமல் குழம்பித் தவித்து புலம்பி நிற்கையில் எதிரே வந்த அன்னையோ புன்னகை செய்து, "வருக, கவிஞ!" என்று என்னை வரவேற்றாள்.

விழிப்பு ஏற்பட்டு விண்ணைப் பார்த்தேன். அருக்கன் அங்கே ஆடாய் விழித்துக் கொண்டிருந்தான்.

பொறிகள்

சுயபுத்தி

வாழ்வில் சத்யத்தை மதிக்காதவன் இலக்கியத்தில் உண்மையைக் காணமுடியாது. அழகைப் பார்க்க முடியாது தங்கம் இல்லாவிட்டால் நகை செய்ய முடியாது சுரங்கம் இல்லாவிட்டால் தங்கம் கிடைக்காது.

* * *

சிரிப்பதைப் பிழைப்பாகக் கொண்டவனுக்கு சிந்திக்கப் போதிராது. நெசவாளிக்கு குரங்கு தேவையில்லை.

* * *

பொருள் தேவை இல்லை என்பதும் உடலுக்கு மூச்சு தேவை இல்லை என்பதும் ஒன்று தான். பொருள் என்றால் இரண்டு விதமான அர்த்தமும் அடக்க மல்லவா?

* * *

வாழ்வு கிளைத்தால் கலைகள். மரமில்லாமல் கிளை இல்லை. பலனில்லாக்கிளை விறகுக்குத் தான் ஆகும்.

* * *

கண்ணுக்குத் தெரியாத பொழுது கருத்து. கண்ணுக்குத் தெரியும் பொழுது எழுத்து அல்லது உருவம் அல்லது சித்திரம்.

* * *

ஓவியத்துக்குப் பொருள் தேவை இல்லை என்பதும் உயிருக்கு மூச்சு தேவை இல்லை என்பதும் ஒன்று தான்.

* * *

தன் தன் என்ற தம்பட்ட ஒலியை தரணி பொறுத்துக் கொள்ளும்—உடலில் ஓர் அணு நோயுற்றால் உடம்பு பொறுத்துக் கொள்வது போல.

* * *

பேச்சை ரசிக்கத் தெரிந்தால் பாட்டுக்குத் தீர்ப்புக் கூறும் தகுதி உண்டாகி விடாது.

* * *

ருசிகளைத் தெரியாதவன் சமையலுக்கு "பணிக்கு" சொல்ல வரக்கூடாது.

* * *

வேப்பிலை எனக்குப் பிடிக்கிறது என்று ஓட்டகம் சொல்வதனால் அது விமர்சகன் ஆகிவிடுவதில்லை.

* * *

புதுமை என்றால் கொம்பில்லை. பழமை என்றால் இழுக்கில்லை. பிறக்கும் புதுக் குழந்தைக்குக் கூட கண்கள் மூன்றல்ல.

மதிப்புக்களவுகோல் மந்திரிகள் ஆசி
பதிப்புக்களவு கோல் பப்ளிஷர் தயவு.

* * *

துன்பம் ஒரு மன நிலை. தன்மீது வெளியே இருந்து சுமத்தப்படும் மெய்ப்பொருளன்று. கத்தி வெட்டி விட்டால் நமக்குத் தான் வலி. கத்திக்கு வலி இல்லை. கத்தியில் வலியும் இல்லை.

* * *

மலையில் முட்டிக் கொள்வது வீரமாகாது. மனப்பிராந்தி இன்பமாகாது. கல்லடிமங்கன் கலைஞனாக மாட்டான். சாக்கடைக் கணக்கு நிர்வாக அறிக்கை ஆகமாட்டாது.

* * *

இந்தியாவின் கலைப் போக்கு குறிப்பற்ற பிரயாண மன்று; புத்திக்குப் பிடிபடாத அடிமனத்தின் நைப்பாசை அன்று; வாழ்வுக்குப் பொருள் காணாத தோல்வியின் மொணமொணப்பன்று. மாற்றம் எவ்வளவு ஏற்பட்டாலும், சாவு எவ்வளவு நிரந்தரமாக இருந்தாலும் ஜீவன் தளர்ந்து விழுந்து விடுவதில்லை. விழக் கூடாது. அகந்தைக்குக் (சீவனுக்கு) கொம்பை ஒடித்து விட்டால் சிவமாகத் தெரியும். இது மாங்காய்க்கு ஏங்கும் நொண்டியின் அடிமனக் கனவல்ல.

சிக்கல்—வேலன்

கொட்டைமுத்துப்புலவர்

பாதையில்லாக் காடு,
பயணம் செய்யும் 'மூடு'.
பின்னால் அழைப்பொலி.
நின்று,
திரும்பிப் பார்த்தேன்,
இல்லை, இல்லை;
நி
ன்
று
பிம்ருதிப் பார்த்தேன்—
வானத் தச்சன்!
நெருங்கி வந்து சொன்னான்;
சிக்கலின் பிம்பமே கவிதை.
சிக்கலில் நிற்கும் அந்த
சிங்கார வேலன்
சொல்ல மறந்தது:
ஐ காண்ட்ரடிக்ட் மை செல்ஃப்...
வாய் குழம்பி விழுந்துடைந்த
சொற் கோவைகளை
'கவிதை' யென லேபிள் ஒட்டி
காட்டக் கையெடுக்கும் போதா
கடன் பெற்ற 'கம்மிங்ஸ்'
கக்க மறைவிலிருந்து
விழுந்து தொலைக்கணும்.

மரக் குதிரை

எஸ். வைதீஸ்வரன்

புயலில் கலங்கிய கிழமரம்
தற்கொலைக் கனவு கண்டு பதறி
தொப்பென விழுந்தது கீழே.
பூமி தாங்கிப் பிடித்துக் கொண்டு
சாக விடவில்லை.
அறுந்து முனகிய உயிரும்
வெடித்து மக்கிய உடலும்
பிழைத்துக் கொண்டது ..... பெரிதில்லை.
கிழத்துக்குப் புகழ் ஜன்மம்
இளைத்து விட்டதே.......

எங்கிருந்தோ வந்தார்கள்
ஏந்திக் கொண்டு நின்றார்கள்
யானையேறிக் கப்பலாடி
தண்டவாள வழியாய்ப்
பட்டண நெடிக்குள்ளே
தமுக்கடிப்பு ஊர்வலமாய்க்
கட்டைக் கடைக்கு வந்தும்......

கொலுவிருந்து, கண்துஞ்ச
மஞ்சமும், மாட்சியும்
மக்கள் சுற்றமும் கொஞ்சமோ ?
அப்பப்ப.. ...கோடியோ ?
கால் பிடித்துத் தலை வருடிப்
பேன் பார்த்து சுளுக்கெடுக்க
பேரான பேர்கள் ?

முதுகை வளைத்துவிட ஒருவனாய்
முன்னங்கால் சொடுக்கெடுக்க மறுவனும்
வாலைப் பிரித்து விட இருவனும்.
வற்றல் கிழத்துக்குப் புதுச் சாயம் பூசிவிட
வாலிபம் '' வந்தேன் '' என்று எம்பிக் குதிக்க

பஞ்சவர்ணக் குதிரை
விழுந்து பிறந்து பறந்தது......

இளமைக்குள் முதுமையா?
பார்வைக்குப் போர்வையோ ?
மூப்புக்கு முக்காடிட்ட
மேக்கப்பு ஜாலக்கோ ?
யாருக்குத் தெரியும் ?
காலத்து வௌவால் கட்டிவைத்த கூட்டிற்குள்

காலும் தலையும் மறைய
ஆடித் தவித்தது குதிரை !
ஆனந்தப்படுவதாய்
ஒரு பேய்பிரமை வேறு !
சீர்திருத்த நரம்பு சுண்டிவிட,
எதிர்காலக் கனவு வாய்பிளக்க
புரட்சித்தனமும், சேவைக்க படமும்
புழுதியைக் கிளப்ப, வாலடித்ததே தவிர
கால் அங்குல முன்னேற்றம் ? ஊஹூம் !
அறிகுறியாவது ?

மழை பிடித்துக் கொண்டது...
சிரித்தது பேயோ...விழித்தது தெய்வமோ ...
என்று இடி மின்னல் கீறித் தெறிக்க
ஆடிய குதிரை அல்லாடியது.
தலை விழுந்து
மேனி மடங்கித் தொய்ய,
சாயம் வெளுத்துத்
தோலுரித்த உடம்பாக...
நாற்றமும் சிதைவும் பல்லிளிக்க...
புறத்தைக் கிழித்த அகமாய்
சதையைப் பிளந்த மூலமோ ?
தூணைப் பிளந்த பரம் போல்
தொன்மை வெடித்த நியதியோ ?
என்றால் ..
ஏதோ தெரியலாமோ ?

சகுனம்

சு. சங்கரசுப்ரமண்யன்

எண்ணெய்க்காரன் எதிரில் வந்தான்
எரிச்சலுடன் திரும்பி விட்டேன்.
சிகைத்தூள் பலிக்காமல்
பளபளக்கும் தன்மேனி
யாருக்குச் சகுனம் ?

வீதிப் பூனை
வீட்டிலே வளர்த்தால்
வினையேதும் விளையாது.

விறகைச் சுமக்கும்
தலையைக் கண்டால்
வேதனை.
விழுந்த தலையைச்
சுமந்து வரும்
விறகால் நன்மை.

அணையும் விளக்கு
அழிவுக்குக் கட்டியம்.
உதிரும் சுடரோ
உவகையின் ஒளிர்வு.

விம்மலும் வீறலும்
உடன் பிறப்பு
தும்மலும் தூரலும்
தடையா ?

ஒரு பெரிய வாய்ப்பு

அன்புள்ள வாசகர்களே,

முன்பு வெளியான எழுத்து பிரசுரம் வெளியிட்டுள்ள 9 புத்தகங்கள் விளம்பரத்தை கவனித்திருப்பீர்கள். மறுபடியும் உங்கள் கவனத்துக்கு அவைகளை கொண்டு வருகிறோம்.

வ. ரா., ந. பிச்சமூர்த்தி, கு. ப. ரா., சிட்டி, வல்லிக்கண்ணன், சி. சு. செல்லப்பா ஆகியோரின் புத்தகங்களை ஒன்று சேர்த்து ஒரே சமயத்தில் பார்க்கிற வாய்ப்பு இப்போதுதான் தமிழ் புத்தக உலகத்தில் முதல் முறையாக கிடைக்கிறது என்று ஒரு இலக்கிய அன்பர் குறிப்பிட்டார்.

உள்ளடக்கம், உருவம் இரண்டும் இழைய இவ்வளவு சிறப்பாக புத்தகங்கள் வெளியானது ஒரு பெரிய சாதனை என்று மற்றொருவர் குறிப்பிட்டார்.

ஏதோ மாடர்ண் லைப்ரரி (பிரபல இங்கிலிஷ் பிரசுரக் கம்பெனி) மாதிரி இருக்கிறதே என்றார் இன்னொருவர்.

மேல் நாட்டு பதிப்புடன் போட்டி போடுகிறதே என்றார் வேறொருவர்.

இதெல்லாம் புத்தகம் வாங்கியவர்களிடமிருந்து வந்த வார்த்தைகள்.

ஆகவே எழுத்து வாசகர்கள் ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு செட் இந்த 9 புத்தகங்களையும் வாங்கி இலக்கியத்தரமான உங்கள் புத்தகங்களின் வரிசையில் சேர்த்துக் கொள்ளவும். உங்கள் கைகளுக்கு திரும்பத் திரும்ப வர வேண்டிய நூல்கள் இவை.

நல்ல சலுகை

பின் வரும் 9 புத்தகங்களும் ரூ 31.00 பெறுமான முள்ளவை, ஆனால்—

நீங்கள் ரூ. 25 மட்டும் அனுப்பிவைக்கவும்

தபால் செலவு எங்களது.

வி. பி. பி. மணியாடர் மூலம் பெறலாம்: வெளியூர் செக்குகள் மாற்று கமிஷன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

1. சொர்க்கத்தில் சம்பாஷணை (வ ரா) ரூ, 3·00
2. வசந்தகாலம் ,, ரூ. 3·00
3. பதினெட்டாம் பெருக்கு (ந. பிச்சமூர்த்தி) ரூ. 4·00
4. வழித்துணை ,, ரூ. 2·00
5. அகல்யை கு. ப. ரா. ரூ. 4·00
6. ஆண் சிங்கம் (வல்லிக்கண்ணன்) ரூ. 4·00
7. சில விஷயங்கள் (சிட்டி) ரூ. 3·0
8. சத்யாக்ரகி (சி. சு செல்லப்பா) ரூ. 4·0
9. மணல் வீடு ,, ரூ. 4.00

இரண்டு, மூன்று தவணைகளில் பணம் செலுத்தலாம்.

எழுத்து பிரசுரம்
19-A, பிள்ளையார் கோவில் தெரு,
சென்னை-5.

CONNEMARA PUBLIC LIBRARY
7 AUG 1965
MADRAS
P 199
7-8-65

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5
Printed by M. Ramanath... ...s, 97 Big Street, Triplicane Madras-5.